**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.25/2024** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | Prosecution | : | **P.W. 1** |
| | Defence | : | **D.W.** |
| | Court | : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | நல்லதம்பி | **S/o.(or)W/o. :** | கிருஷ்ணசாமி உடையார் |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of

**21.02.2025**

**அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். 1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம் வடகராம்பூண்டி கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாயம் செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 22.01.2017ல் காலை சுமார் 9 மணியளவில் பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டம் திருவாளந்துறை கிராமத்தில் எனக்கும் என் மனைவிக்கும் சுமார் 9 ஏக்கர் நிலம் உள்ளது. விவசாய மோட்டார் பம்புசெட்டும் உள்ளது. 22.01.2017 காலை சுமார் 9 மணியளவில் மோட்டார் பம்புசெட்டிலிருந்து வயலுக்கு நீர் பாய்ச்சிவிட்டு வீட்டுக்கு திரும்பி வந்தேன். என் வயலுக்கு பக்கத்தில் மாம்பட்டி அய்யனார் கோவில் உள்ளது நான் இருசக்கர வாகனத்தில் நான் வீட்டுக்கு திரும்பி வந்து கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் திருவாளந்துறைக்கு போகக்கூடிய 10

அடி உயரமுள்ள வாய்க்கால் உள்ளது. அதில் ஏறி இறங்கும் போது 1வது எதிரி கல்யாண சுந்தரம் வாய்க்காலில் இருந்த புதருக்குள் உட்கார்ந்திருந்தார். நான் மேலே ஏறி இறங்கும் போது கல்யாணசுந்தரம் புதரிலிருந்து வந்து என் தலையில் பின்னால் கட்டையால் அடித்தார் நான் அடித்தவுடன் வண்டி கீழே இறங்கும்போது என் முதுகில் அடித்தார் வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டேன். நான் எழுந்து பார்க்கும்போது பெரியசாமியின் மகன் சாமிதுரை, தங்கராசு மகன் செல்லதுரை, இருவரும் என்னை முதுகில் கட்டையால் அடித்தார்கள் மூன்று பேரும் மாறிமாறி அடித்தவுடன் கீழே விழுந்துவிட்டேன். மாணிக்கம் மகன் சாமிதுரையும், பொன்னுசாமி மகன் அழகுவேல் சாமியும் புதரிலிருந்து வந்து கட்டையால் என்னை அடித்தார்கள். நான் எவ்வளவு கெஞ்சியும் கேட்கவில்லை. அவர்கள் அடித்ததில் அவர்கள் கொண்டு வந்த கட்டை உடைந்துவிட்டது. பிறகு மண்வெட்டியின் இரும்பு கைப்பிடியை கொண்டு எனது வலது கால், வலது கையில் அடித்தார்கள். வலதுகை வலது காலில் அடித்தார்கள். அதில் எனக்கு வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. ஏற்கனவே எனக்கும் எதிரிகளுக்கும் கோவில் திருவிழாவில் மரியாதை செய்வது சம்பந்தமாகவும், எலக்ஷன் அவர்கள் தோற்றுவிட்டதன் காரணமாகவும் வலகரம்பூண்டியில் நான் குடியிருக்கும் வீட்டிற்கு பக்கத்தில் உள்ள 16 சென்ட் நஞ்சை நிலம் சம்பந்தமாகவும் முன்விரோதம் இருந்தது அதன் காரணமாக என்னை அடித்துவிட்டார்கள். துரைசாமி மகன் அழகுவேல் என்பவர் அவர்கள் என்னை அடிக்க ஆரம்பித்ததுமே தடுக்க வந்தார். பெரியசாமி மகன் சாமிதுரை அவரை பார்த்து கிட்டே வந்தால் உனக்கும் அடிவிழும் என்று மிரட்டினார் அதனால் அவர் போய்விட்டார். அவர்கள் என்னை அடித்துக்கொண்டிருக்கும் போதே எங்கள் ஊரை சேர்ந்த ராமர்

என்பவர் எக்சல் வண்டியில் வந்து அவர்களை சத்தம்போட்டார். உடனே அவர்கள் ஓடிவிட்டார்கள். நான் அடிப்பட்டதில் எழுந்திருக்க முடியாமல் கிடந்தேன். தகவல் தெரிந்து என் மகன் அழகுதுரை அங்கு வந்தார். வடிவேலு, என்பவரும் அங்கு வந்தார். என் மனைவி தகவல் தெரிந்து அங்கு வந்தார் பிறகு நிறையபேர் அங்கு கூடிவிட்டார்கள். பிறகு என் மகன் அழகுதுரை 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்தார். வருவதற்கு நேரம் ஆனதால் வடகரம்பூண்டியில் உள்ள ஒரு டாடாசுமோ வண்டியில் என்னை ஏற்றி கொண்டு வி.களத்தூர் காவல்நிலையம் சென்று தகவல் சொன்னோம். என்னை மருத்துவமனைக்கு போகும்படியும் அங்கு வந்து விசாரிப்பதாகவும் சொன்னார்கள். நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு வந்துசேர்ந்தேன். மருத்துவமனையில் நடந்ததை பற்றி விசாரித்தார்கள். பிறகு நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து கொண்டேன். வி.களத்தூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் சுரேஷ் மதியத்திற்கு மேல் மருத்துவமனைக்கு வந்து என்னிடம் வாக்குமூலம் பெற்றுக்கொண்டார். நான் சொல்லசொல்ல வாக்குமூலத்தை எழுதி என்னிடம் கையொப்பம் பெற்றார் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அது அ.த.சா.ஆ.1 ஆகும். 23.01.2017 மதியத்திற்கு பிறகு நான்அரசு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டேன். பிறகு பெரம்பலூர் மது தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன். 02.02.2017 மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டேன். 24.01.2017 அன்று நான் பதிவு தபாலில் மாவட்ட கண்காணிப்பாளர், உதவி ஆய்வாளருக்கு புகார் ஒன்றை அனுப்பினேன். 02.02.2017 அன்று டிஐஜிக்கு புகார் ஒன்றை தபாலில் அனுப்பினேன். 13.02.2017 அன்று திருச்சி டிஐஜியை போய் நேரில்பார்த்து புகார்

கொடுத்தேன். மாவட்ட ஆட்சி தலைவருக்கு அதே தேதியில் புகார் கொடுத்தேன். 01.03.2017ல் சென்னைக்கு சென்று டிஜிபியை பார்த்தேன். அதன்பிறகு மாவட்ட கண்காணிப்பாளருக்கு தகவல் சொல்லி 02.03.2017ல் கூடுதல் மாவட்ட கண்காணிப்பாளர் சம்பவம் நடந்த இடத்தை வந்து பார்த்தார்கள். 03.03.2017ல் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். அன்றைய தேதியில் எதிரிகளை காவல்நிலைய ஜாமினில் உதவி ஆய்வாளர் வெளியில் விட்டார். 18.03.2017ல் அழகுவேல் சாமியை கைது செய்தார். மனித உரிமை ஆணையத்திற்கு சென்று காவல் துணைகண்காணிப்பாளர் ஜவஹர்லால், ஆய்வாளர் தங்கவேல், உதவி ஆய்வாளர் சுரேஷ் ஆகியோர் பேரில் புகார் கொடுத்தேன். காலதாமதமாக நான் புகார் கொடுத்ததால் புகாரை தள்ளுபடி செய்தார்கள். பிறகு சென்னை உயர்நீதிமன்றத்திற்கு சென்று எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மனு செய்தேன். சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட கேட்டேன். ஆய்வாளர் நீதிமன்றத்தில் ஆஜராகி அவரே நடவடிக்கையை மேற்கொள்வதாக ஒப்புக்கொண்டார்கள். எனவே வழக்கை மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், மறுவிசாரணை செய்து குற்றபத்திரக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உயர்நீதிமன்றத்தில் உத்தரவிட்டார்கள் அந்த உத்தரவின் நகல் அ.த.சா.ஆ.2. அதன் பிறகு ஆய்வாளர் விசாரணை செய்து குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தார்கள்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

அ.த.சா.ஆ.1 உள்ளது என்னுடைய கையொப்பம் தான். என்னிடம் காட்டப்படும் என்னுடைய லெட்டர் பேடில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். இந்த கையெழுத்துக்கும் அ.த.சா.ஆ-1ல் உள்ள

கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் நான் அடிப்பட்டிருந்ததால் நான்அவ்வாறு கையெத்து போட்டேன். அந்த ஜெராக்ஸ் லெட்டர்பேடில் உள்ள வாசகம் மற்றும் கையெழுத்து எ.த.சா.ஆ.1 ஆகும். நான் திட்டக்குடி மாவட் உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.6/2017 ல் கல்யாணசுந்தரம் மற்றும் 6 நபர்கள் மீது சிவில் வழக்கு நடந்து அந்த வழக்கு தள்ளுபடியானது என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தில் முதல் விசாரணையில் சொன்னதுபோல தான் நான் கொடுத்த புகாரிலும் போலீசார் விசாரித்த போதும் கூறியுள்ளேன். நான் சம்பவம் நடந்தவுடன் வி.களத்தூர் காவல்நிலையம் சென்ற போது அங்கு ஒரு ஏட்டையா தான் இருந்தார். காவல்நிலையத்தில் யாரும் இல்லை என்றும் மருத்துவமனைக்கு போகும்படியும் ஏட்டு சொன்னார் அதனால் நான் அங்கு வைத்து புகார் கொடுக்கவில்லை. மருத்துவமனையில் விசாரித்த போது என்னை கட்டையாலும், இரும்பு பைப்பாலும் அடித்ததாக தான் சொன்னேன். நான் புகார் கொடுத்த பிறகு சுமார் 43 நாட்கள் கழித்து தான் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தார்கள். நாங்கள் கொடுத்த புகாருக்கு உதவி ஆய்வாளர் சுரேஷ் ரசீது எதுவும் கொடுக்கவில்லை. நான் கொடுத்த புகாரில் 03.03.2017 அன்று தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியவில்லை. சம்பவம் நடந்த இடத்திற்கும் ராமநத்தம் காவல்நிலையத்திற்கும் 12 கி.மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்த இடத்திற்கும் விகளத்தூர் காவல்நிலையத்திற்கும் 3 கி.மீ தூரம்இருக்கும். ராமநத்தம் காவல்நிலையத்தில் நானும், எதிரிகளும் இருதரப்பினர்களாக இருந்து அடித்துக்கொண்டோம் என்றால் எனக்கு தெரியாது. அதே போல 1ம் எதிரியின் மனைவி கலைவாணி என்பவர் என் மீதும், தனலெட்சுமி மீதும், என் மகன் மீதும், சங்கீதா, தங்கம்மாள், பிரகாஷ் ஆகியோர் பெயரில்

புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தலையில் ரத்தகாயம் எதுவும் ஏற்படவில்லை. எனக்கு வலது கையில் தான் எலும்பு முறிவு ஏற்பட்டது. நான் வலதுகையில் தான் புகார் வாக்குமூலத்தில் மருத்துவமனையில் வைத்து கையெழுத்து போட்டேன். முதல் தகவல்அறிக்கையின் நகல் எனக்கு கொடுக்கப்பட்டு கையொப்பம் எதுவும் பெறப்படவில்லை. நான் உதவி ஆய்வாளர் சுரேஷிடம் ஆள்மூலம் முதல் தகவல் அறிக்கை நகல் கேட்டேன் கொடுக்கவில்லை. போலீசார் எங்கள் ஊருக்கு 02.03.2017 அன்று வந்து சம்பவம் நடந்த இடத்தை பார்த்துவிட்டு 03.03.2017 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். மருத்துவமனையில் இருந்தபோது என்னை உதவி ஆய்வாளர் விசாரித்தார். அதன்பிறகு 3 நாட்கள் கழித்து உதவி ஆய்வாளர் சுரேஷ் மது மருத்துவமனையில் நோக்கம் பார்த்துவிட்டு போனார் விசாரிக்கவில்லை. முதல் தகவல்அறிக்கை போடுமாறு அங்கிருந்தவர்கள் சொன்னதாக என்னிடம் சொன்னார்கள். நான் மேலதிகாரிகளிடம் புகார் கொடுத்த பிறகு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். நான் மருத்துவமனையில் எந்த இடத்தில் வைத்து சம்பவம் நடந்ததாக சொன்னேன் என்று ஞாபகமில்லை. சம்பவம் நடந்தஇடம் திருவாளந்துறை மாம்பட்டியான் கோவில் பக்கத்தில் என்று மருத்துவரிடம் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் இந்த வழக்கில் ஆயுதங்களை கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது. எதிரிகளின் சொந்தக்காரர்கள் அங்கிருந்த கம்பி, கட்டை ஆகியவற்றை அப்புறப்படுத்திவிட்டார்கள். எனக்கு இடது கையில் காயம் ஏற்பட்டதாக மருத்துவரிடமும், போலீசாரிடமும் சொன்னேனா என்று ஞாபகமில்லை. எனக்கு லேசாக சிராய்ப்பு காயமும், எலும்பு முறிவும் தான் ஏற்பட்டது.

வலதுகையில் ஏற்பட்ட எலும்பு முறிவு பற்றி உதவி ஆய்வாளரிடம் சொன்னேனா என்று ஞாபகமில்லை. எனக்கும் கல்யாணசுந்தரத்துடன் சேர்ந்த மற்றவருடனும் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை. சிவில் வழக்கு போட்டதாலும் எங்களுக்குள் பிரச்சனை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், நான் போட்ட சிவில் வழக்குகள் தள்ளுபடி ஆனதால் எதிரிகள் மீது கிரிமினல் வழக்கு போட வேண்டும் என்று நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. 22.01.2017 அன்று வடகரம்பூண்டியில் நானும் என்னுடன் சேர்ந்த 6 பேரும் எதிரிகளும் சேர்ந்து சண்டை போட்டுக்கொண்டோம் என்றும் ராமநத்தம் காவல்நிலையத்தில் இது சம்பந்தமாக குற்ற எண்.107/2017 வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றும் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.